# கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

## கல்விப்பீடம்

## பட்டப்பின்படிப்பு கல்வி திப்புளோமாக் கற்கைநெறி (முழுநேரம்)

## 2016/2017

இரண்டாம் பருவம்

## CU 508 கலைத்திட்ட கொள்கையும் செயன்முறையும்

நேரம்: 3 மணித்தியாலங்கள்

---

### பகுதி I

பகுதி I இன் சகல வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து எவையேனும் விரும்பிய நான்கு வினாக்களுக்கும் விடை தருக.

i. இலங்கையில் இடைநிலைக் கலைத்திட்டம் தொடர்பாக 2007 ஆம் ஆண்டு அறிமுகஞ்செய்யப்பட்ட சீர்திருத்தங்களின்படி மாணவர்களிடம் விருத்தி செய்யப்பட வேண்டிய பொருத்தமான திறன்கள் நான்கினைப் பெயரிடுக.

ii. நீங்கள் கற்பிக்கும் ஒரு பாடத்தினைத் தெரிவு செய்து குறித்தவொரு கற்பித்தல் அலகுக்கான புளூமின் கல்வி நோக்கங்களின் அறிகையாட்சிப் பகுப்பிற்கேற்ப நான்கு ஆற்றல் மட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நான்கு விசேட நடத்தைசார் நோக்கங்களை முறையே எழுதிக் காட்டுக.

iii. பாடசாலை மட்ட கணிப்பீட்டின்மூலம் மாணவர்மைய கற்றலானது விருத்தி செய்யப்படுமாற்றை இரண்டு உதாரணங்களை அடிப்படையாகக் கொண்டு சுருக்கமாக முன்வைக்குக.

iv. பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படும் மறைநிலைக் கலைத்திட்டத்தின் இயல்பினை சுருக்கமாக எடுத்துக்காட்டுக.

v. கலைத்திட்ட அபிவிருத்தி செயன்முறையின் அடிப்படை மூலகங்களை குறிப்பிடுக.

(5x 4 = 20 புள்ளிகள்)

## பகுதி II

(1) i. "கல்விச் செயன்முறையில் கலைத்திட்டம் எண்ணக்கரு தொடர்பாக பல்வேறுபட்ட வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன." பொருத்தமான வரைவிலக்கணங்கள் மூன்றினை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றினை ஆராய்க.

**(10 புள்ளிகள்)**

ii. பாடசாலை கலைத்திட்டத்தை நோக்கிய சவால்கள் ஐந்தினைக் குறிப்பிட்டு அவற்றுள் இலங்கைப் பாடசாலைகள் தொடர்பான மிகவும் முக்கியமான சவால்கள் இரண்டினை எதிர்கொள்ளும் வகையில் பாடசாலைக் கலைத்திட்டத்தில் கொண்டுவரத்தக்க மாற்றங்களுக்கான யோசனைகளை முன்வைக்குக.

**(10 புள்ளிகள்)**

(2) i. கலைத்திட்ட ஒழுங்கமைப்பில் பயன்படுத்தப்படும் நோக்கத்தையொட்டிய மாதிரிகையின் பிரதான இயல்புகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கமாதிரிகையைப் பயன்படுத்துகையில் ஏற்படும் சாதக பாதக தன்மைகளை ஆராய்க.

**(10 புள்ளிகள்)**

ii. கேரின் (Kerr) கலைத்திட்ட அபிவிருத்திக் மாதிரிகையானது மற்றைய நோக்க மாதிரிகைகளை விடவும் விரிவானது என்பதை எடுத்துக்காட்டுவதற்கு கேரின் மாதிரிகையின் பிரதான அம்சங்களை உள்ளடக்கும் வகையில் புறவுருவப்படத்தின் உதவியுடன் சுருக்கமாக விளக்குக.

**(10 புள்ளிகள்)**

(3) i. மாணவர்மைய கலைத்திட்டத்தின் பிரதான இயல்புகளை விளக்கி இலங்கையில் பயன்படுத்தப்படும் பாடசாலைக் கலைத்திட்டத்தை மாணவர்மைய கலைத்திட்டமாக மாற்றுவதில் கவனத்திற்கொள்ள வேண்டிய காரணிகளை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

ii. மேலே வினா இலக்கம் 2 இல் குறிப்பிட்ட கலைத்திட்ட கொள்கைகள் தவிர்ந்த உங்களுக்கு தெரிந்த வேறு கலைத்திட்ட கொள்கைகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றின் பிரதான இயல்புகளை முறையே சுருக்கமாக எடுத்துக்காட்டுக.

**(10 புள்ளிகள்)**

(4) பின்வருவனவற்றுள் **இரண்டுக்கு** சிறுகுறிப்பெழுதுக.

a) இலக்கு, நோக்கம் மற்றும் விசேட நோக்கம் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பு

b) எதிர்பார்ப்பு கலைத்திட்டம், நடைமுறைப்படுத்தப்படும் கலைத்திட்டம் மற்றும் மறைநிலைக் கலைத்திட்டம் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பு

c) லோட்டனின் கலைத்திட்ட அபிவிருத்தி மாதிரிகை

d) கலைத்திட்ட ஒழுங்கமைப்பு கோலம்

**(10 x 2 = 20 புள்ளிகள்)**

(5) i. பாடசாலைக் கலைத்திட்டத்தில் பாடஉள்ளடக்கங்களை தெரிவு செய்வதில் பயன்படுத்தப்படும் நியதிகள் ஐந்தினைச் சுருக்கமாக குறிப்பிடுக.

**(10 புள்ளிகள்)**

ii. பாடசாலைக் கலைத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட பாடமொன்றின் உள்ளடக்கத்தினை தீர்மானிப்பதில் மேற்படி நியதிகள் எந்தளவுக்கு பொருத்தமானது என்பதை எடுத்துக்காட்டுக.

**(10 புள்ளிகள்)**

(6) i. குறித்த பாடத்துறைக்குப் பொருத்தமான பாட உள்ளடக்கத்தைத் தெரிவு செய்கையில் கலைத்திட்ட கொள்கையாளர்கள் எதிர்நோக்கும் சிரமங்களை சுருக்கமாக எடுத்துரைக்குக.

**(10 புள்ளிகள்)**

ii. பாட உள்ளடக்கத்தை தெரிவு செய்கையில் பயன்படுத்தக்கூடிய பாட உள்ளடக்க தெரிவு அணுகுமுறைகள்/செயன்முறைகள் இரண்டினை விளக்குக.

**(10 புள்ளிகள்)**